உடுக்குறியிட்ட வினாக்கள்.

விண்ணப்ப முத்திரை வில்லை ஒட்டுதல்.

0 2005.—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சாதியினரும் ஒரு ரூபாய் விண்ணப்ப முத்திரை வில்லை ஒட்டாமலே சாதிச்சான்று, பிற அனைத்துச் சான்றுகளும் வாங்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சாதியினரும், விண்ணப்ப முத்திரை வில்லை ஒட்டாமலேயே சாதிச் சான்றும், இருப்பிடச் சான்றும் வாங்குவதற்கு அரசு ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால் பிற அனைத்துச் சான்றுகளுக்கும் இச்சலுகை கிடையாது.

1971 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட குடியிருப்புச் சட்டம்.

7741. திரு. மா. மணிமாறன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1971 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட குடியிருப்புச் சட்டத்தின் பலன் இன்றும் ஏழைகளுக்குப் பயனளிக்காமல் உள்ளதற்கான காரணங்களைட் பரிசீலிக்க அரசுக்கு வேண்டுகோள் வரப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசின் நிலை என் ?